வாய்ப்பில்லை. உபயதாரர்கள் மூலமாகத் திருப்பணி நடத்தும் வாய்ப்பு இல்லாத நிலையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதியிலிருந்து வசதியான உபயதாரர்களைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் அதனுடைய மதிப்பீட்டிற்குத் தகுந்தாற்போல நிதியைச் சேர்ப்பீர்களேயானால், மூன்றில் ஒரு பங்குத் தொகையை உடனடியாக அரசு கொடுத்து திருப்பணி தொடங்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 8, திரு. கோவை தங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

முற்பகல் 10-40

8—

முதியோர் இலவச விடுதி

***22818—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் முதியோர்களுக்கு இலவச விடுதி நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான என்னை அம்மா அவர்களுடைய அமைச்சரவையில் சமூக நலத் துறை அமைச்சராக நியமித்து, தமிழக மக்களுக்குப் பணியாற்றிட ஒரு நல்ல வாய்ப்பினை அளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாகவும், சேலம் மாவட்டத்து மக்களின் சார்பாகவும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இப்போது விடை அளிக்கின்றேன்:

(அ) வால்பாறையில் முதியவர்களுக்கு இலவச விடுதி நடத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் செயல்பாட்டில் இல்லை. (ஆ) ஆனால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லம் நடத்த முன்வருமானால் அரசு மானியம் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 99 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் நலிவுற்ற கூலித் தொழிலாளர்கள். நாள் ஒன்றுக்கு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளம் வெறும் 72 ரூபாய். இந்த 72 ரூபாயில் P.F. போக, அவர்கள் கைக்குக் கிடைப்பது 63 ரூபாய். இந்த 63 ரூபாயை வைத்து குழந்தைகளைப் படிக்க வைப்பார்களா அல்லது மருத்துவ உதவி செய்வார்களா அல்லது வயது முதிர்ந்த பெரியவர்களைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி உதவி புரிவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, வால்பாறையில் முதியவர்களுக்கு இலவச விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தர முன்வருவார்களா என்பதை வலியுறுத்திக் கேட்கின்றேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லங்கள் நடத்திடத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பது மாநில அரசினுடைய திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் எவையும் அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவது இல்லை. முதியோர் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு அதற்கான பராமரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே கோவை மாவட்டத்தில் இரண்டு தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்களிடம் முதியோர் இல்லம் ஆரம்பிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் முன்வந்தால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்து, தொண்டு நிறுவனங்கள் விடுதி ஆரம்பிக்க முன்வந்தால், விடுதி இல்லங்கள் ஆரம்பிப்பதற்கு அரசு உதவி செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2005 பிப்ரவரி 2]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் தனியார் தொண்டு நிறுவனங்கள் அங்கே ஒன்றுமே கிடையாது. எல்லாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான். அதுவும் கூலி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்; தாழ்த்தப்பட்ட மக்கள்தான் அங்கே இருக்கின்றார்கள். அங்கே கல்லூரிகள் கிடையாது. பெரிய அளவில் மருத்துவமனைகள் கிடையாது. மில்கள், பேக்டரிகள் எதுவுமே கிடையாது. வயது முதிர்ந்தவர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற நேரத்தில் வேலைக்குச் செல்வதற்கு அங்கே எந்த வழியுமே கிடையாது. இப்பொழுது சிறப்பு நீதிமன்ற நீதிபதியை நியமித்து, அவரும் ஓய்வு பெற்றுவிட்டதால், அங்கே இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, வாங்குகின்ற சம்பளத்தை, குறைந்த கூலியை வைத்துக்கொண்டு அங்கே தன்னைப் பெற்றெடுத்த வயது முதிர்ந்த பெற்றோர்களைக் காப்பாற்றுவதற்கு வழி இல்லாமல் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள்; மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி, உடனடியாக சிறப்பு நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிக்குப் பதிலாக ஒரு நீதிபதியை நியமித்து, உடனடியாக அவர்களுடைய சம்பளத்தைப் பெற்றுத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதுடன், வால்பாறையில் வயது முதிர்ந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய தாய், தந்தையரைக் காப்பாற்றுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. இருப்பினும், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை எழுப்பும்பொழுது, வால்பாறையில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் எதுவும் இல்லை என்று கூறியிருந்தார். ஆனால், அது தவறான கருத்து. ஏற்கெனவே வால்பாறையில் இரு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அணுகி, அங்கு முதியோர் இலவச விடுதி நடத்துவதற்கு அவர் முயற்சி எடுத்தால், நிச்சயம் அதற்கு அரசு உதவி செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ப. அரசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.